# பத்திரிக்கைச் செய்தி

## சொத்து வரி நிர்ணயம் செய்ய லஞ்சம் வாங்கிய பில் கலெக்டர் கைது

புகார்தாரர் திரு.மணிகண்டன், தொரபள்ளி, கூடலூர் மாநகராட்சி, நீலகிரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் தந்தை திரு.ராஜேந்திரனுக்கு எஸ்.எப்.எண்.774/2, தொரபள்ளி, வார்டு எண்.10, கூடலூர் மாநகராட்சி எல்லைக்குள் மத்திய அரசின் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. வீட்டை கட்டிய பிறகு புகார்தாரர் சொத்து வரி, வீட்டு எண் ஒதுக்கீடு செய்வது மற்றும் மின் இணைப்பு பெற தடையில்லா சான்றிதழ் பெற வார்டு எண்.10, கூடலூர் மாநகராட்சி அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.ஸ்ரீஜித், பில் கலெக்டர், வார்டு எண்.10, கூடலூர் மாநகராட்சி, நீலகிரி மாவட்டம் அவர்கள் புகார்தாரருக்கு சொத்து வரி நிர்ணயம் செய்ய தனக்கு ரூ.19,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். புகார்தாரர் தன்னால் பணம் கொடுக்க இயலாது என கூறியவுடன் திரு.ஸ்ரீஜித் லஞ்ச பணத்தை ரூ.14,000/-மாக குறைத்தும் பின்னர் மீண்டும் ரூ.11,000/-மாக குறைத்துள்ளார். அரசு விதிப்படி சொத்து வரி 10வது வார்டுக்கு ஒரு சதுர அடிக்கு ரூ.3.02/- மொத்தம் 650 சதுர அடிக்கு ரூ.1,963/- மட்டுமே. ஆகையால் லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், நீலகிரி லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 30.01.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திரு..ஸ்ரீஜித், பில் கலெக்டர், வார்டு எண்.10, கூடலூர் மாநகராட்சி அவர்கள் லஞ்ச பணம் ரூ.11,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.